# பள்ளிக்கல்வித்துறை - வேலூர்மாவட்டம்

*10ம்வகுப்பு* **தமிழ் - அலகுத்தேர்வு 8** **மொத்த மதிப்பெண் - 20**

**I பலவுள் தெரிக** *1X4=4*

1. தமிழினத்தை ஒன்றுபடுத்தும் இலக்கியமாக ம.பொ.சி. கருதியது.
அ) திருக்குறள் ஆ) புறநானூறு இ) கம்பராமாயணம் (ஈ) சிலப்பதிகாரம்
2. நச்சிலைவேல் கோக்கோதை நாடு, நல்யானைக் கோக்கிள்ளி நாடு - இத்தொடர்களில் குறிப்பிடப்படுகின்ற நாடுகள் முறையே,
அ) பாண்டிய நாடு, சேர நாடு ஆ) சோழ நாடு, சேர நாடு
இ) சேர நாடு, சோழ நாடு ஈ) சோழ நாடு, பாண்டிய நாடு
3. இருநாட்டு அரசர்களும் தும்பைப் பூவைச் சூடிப் போரிடுவதன் காரணம்__________
அ) நாட்டைக் கைப்பற்றல் ஆ) ஆநிரை கவர்தல்
இ) வலிமையை நிலைநாட்டல் ஈ) கோட்டையை முற்றுகையிடல்
4. 'மாலவன் குன்றம் போனாலென்ன? வேலவன் குன்றமாவது எங்களுக்கு வேண்டும்' -மாலவன் குன்றமும் வேலவன் குன்றமும் குறிப்பவை முறையே-
அ) திருப்பதியும் திருத்தணியும் ஆ) திருத்தணியும் திருப்பதியும்
இ) திருப்பதியும் திருச்செந்தூரும் ஈ) திருப்பரங்குன்றமும் பழனியும்

**II விடைக்கேற்ற வினா அமைக்க .** *1X1=1*

5. சிலம்புச் செல்வர் என அழைக்கப்படுபவர் ம.பொ. அவர்கள்.

**III மூன்று வினாக்களுக்கும் விடையளி.** *3X2=6*
6. பாசவர், வாசவர், பல்நிண விலைஞர், உமணர் - சிலப்பதிகாரம் காட்டும் இவ்வணிகர்கள் யாவர்?
7. அள்ளல் பழனத்து அரக்காம்பல் வாயவிழ - இவ்வடியில் சேற்றையும் வயலையும் குறிக்கும் சொற்கள் யாவை?
8. வறுமையிலும் படிப்பின்மீது நாட்டம் கொண்டவர் ம.பொ.சி. என்பதற்குச் சான்று தருக
9. பாடாண் திணை என்றால் என்ன?

**III சிறுவினா:-** *3x3=9*

10. சேர, சோழ, பாண்டிய நாட்டு வளங்களை முத்தொள்ளாயிரம் வழி விளக்குக.
11."தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம்" இடம் சுட்டிப் பொருள் விளக்குக.
12. அள்ளல் பழனத்து அரக்காம்பல் வாயவிழ எனத் தொடங்கும். முத்தொள்ளாயிரம் பாடலை அடிமாறாமல் எழுதுக